# 2022 ஆம் ஆண்டில் மாணவர்கள் இழந்த கற்றல் வாய்ப்புகளை முழுமைப்படுத்துவதற்கான சிறப்புப் பாடத்திட்டம்

## தரம் 06 குடியியற் கல்வி – முதலாம் தவணை

சமூக விஞ்ஞானத் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

www.nie.lk

2022 ஆம் ஆண்டில் இழந்த காலத்திற்கான மீட்புத் திட்டம் (**Recovery Plan For Learning Loss 2022**)

தரம் 06

( தரம் 06 முதலாம் தவணைக்கு பாடவேளைகள் 09உம் இரண்டாம் மூன்றாம் தவணைகளுக்கு 12 பாடவேளைகள் வீதம் மொத்தமாக 33 பாடவேளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது )

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | விடய உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள செயற்பாட்டு இலக்கம் | பாடநூலின் பாடத்தின் இலக்கமும் தலைப்பும் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 06 முதலாம் தவணையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கற்றல் பேறுகளும் பாடமும்** | | | | | | |
| எமது பாடசாலை<br><br>6.1 செயற்றிறன் மிக்க உறுப்பினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வார். | பாடசாலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நுணுகி ஆய்வார். | • பாடசாலையின் தோற்றம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை விளக்குவார்.<br><br>• பாடசாலை தோற்றம் பெற்ற காலத்தில் கிராமத்தின்/நகரத்தின் சமூக,பொருளாதாரப் பின்னணி பற்றிய தகவல்களை முன்வைப்பார் | • தோற்றம் பெற்ற பின்னணி<br>• பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிராமத்தின் நகரத்தின் பின்னணி<br>- சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் | 6.1.1 | 01. எமது பாடசாலை<br><br>பாடநூலில் இருந்து தேவையான பகுதியை தெரிவு செய்க | 01 |
| | பாடசாலையின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை நுணுகி ஆய்வார். | • பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை மாதிரி திட்டம் ஒன்றின் மூலம் வெளிப்படுத்துவார்<br><br>• பாடசாலையின் வெவ்வேறு | • பாடசாலையின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு.<br><br>• பாடசாலை ஒழுங்கமைப்பக் கட்டமைப்பின் பல்வேறு வகிபாகங்கள் | 6.1.2 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பணிகளை ஆற்றுவோர், தத்தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் செவ்வனே ஆற்றுதலானது பாடசாலையின் விளைதிறன் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார். | மற்றும் பதவிகளை வகிப்போரின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>• அனைத்து உறுப்பினர்களும் பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் பங்குதாரர்களாவர் | | | |
| | பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தம்மைப் பற்றிய தகவல்களின் அவசியத்தை தேடியாய்வார். | • தமது அடையாளம்<br>• தமது நற்பண்புகள்<br>• தமது திறன்கள்<br>• தமது குறைபாடுகள்<br>• தாம் எதிர்நோக்கும் தடைகள்<br>• தமது அபிவிருத்திக்காக பாடசாலையில் கிடைக்கும் வாய்ப்புக்கள் | • தமது அடையாளம்<br>• தமது நற்பண்புகள்<br>• தமது திறமைகள்<br>• தமது குறைபாடுகள்<br>• தாம் எதிர்நோக்கும் தடைகள்<br>• தமது அபிவிருத்திக்காக பாடசாலையில் கிடைக்கும் வாய்ப்புக்கள் | 6.1.3 | | |
| | பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தாம் தொடர்பான கருமங்களைத் சிறப்பான திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்போடு நிறைவேற்றுவார். | • தமது நாளாந்த கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவார். | • பாடசாலை மாணவர் என்ற வகையில் நாளாந்தக் கருமங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுதல் | 6.1.4 | | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை கலாசாரத்தினுள் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் மற்றும் மரபுகளுக்கு இயைபடைவார் | • பாடசாலையில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள்<br>• மரபுகள்<br>• பாடசாலையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் குறியீடுகள்<br>▪ பாடசாலை கீதம்<br>▪ பாடசாலை கொடி<br>▪ பாடசாலை சீருடை<br>▪ பாடசாலை இலட்சிணை<br>▪ மகுட வாசகம்<br>▪ நோக்கமும் குறிக்கோளும் | • பாடசாலையில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் மரபுகள்<br>• பாடசாலைக்குச் சட்ட முறைமையொன்று தேவைப்படுவதற்கான காரணங்கள், சட்ட திட்டங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல், சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல்.<br>• பாடசாலையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் குறியீடுகள் | 6.1.5 | | 03 |
| | பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அவற்றுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவார். | • பாடசாலையில் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் சமமான உரிமைகள் உரித்தாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பாடசாலை மாணவர் என்றவகையில் தமது உரிமைகளை அனுபவித்தவாறு அதனுடன் இணைந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார் | • பாடசாலை மாணவர் என்ற வகையில் தமக்குரிய உரிமைகள்<br>• அவ்வுரிமைகளுடன் இணைந்த கடமைகள் | 6.1.6 | | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆசிரியர் மாணவர் கடமைகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார் | • ஆசிரியர்களும் மாணவர்களும் தமக்கிடையே பரஸ்பரம் கடமைகளை நிறைவேற்றுதல்<br>• மாணவர்கள் தமக்கிடையேயான கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றல் | • ஆசிரியர்களும் மாணவரும் தமக்கிடையே பரஸ்பரம் கடமைகளை நிறைவேற்றுதல்<br>• மாணவர்கள் தமக்கிடையேயான கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றல் | 6.1.7 | | 01 |
| | பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளை விசாரணை செய்வார். | • பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் பரஸ்பர தொடர்புகளின் தன்மையை விபரிப்பார்<br>• பாடசாலையைப் பாதுகாத்தலானது சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும் என்பதை விளக்குவார்.<br>• சிறுவர்நேயப் பாடசாலைச் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக ஆசிரியர்களதும் மாணவர்களதும் பணிகளை விளக்குவார் | • பாடசாலை மூலம் சமூகத்துக்கும் சமூகத்தின் மூலம் பாடசாலைக்கும் ஆற்றப்படும் சேவைகள்<br>• பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் பல்வேறு தொடர்புகள்<br>• அத்தொடர்புகளைப் பாடசாலையினதும் சமூகத்தினதும் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தும் விதம்<br>• சிறுவர்நேய பாடசாலை சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குரிய ஆசிரியர், மாணவர், மற்றும் சமூகத்தின் பணிகள் | 6.1.8 | | 02 |
| மொத்தம் | | | | | | 09 |